எம்.சி.ஓ.பி எண்: 61 /2025 தேதி: 05.02.2026

மசா. : 2

பெயர் : மோகன்

த/பெ. : பச்சையப்பன்

வயது : 50

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 17 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை. மனுதாரரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தை பார்த்ததற்கும் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. குற்றப்பத்திாிக்கையில் எனது பெயர் கண்ணுற்ற சாட்சியாக காட்டப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. நான் மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தேனா என்றால் இல்லை. போலீஸ்சார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு இருசக்கரவாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரி. விபத்து நடந்த சாலை இருவழி சாலை. அந்த சாலையில் மத்தியில் தடுப்புச்சுவர் இல்லை. என்னை முந்தி கொண்டு டயோட்டா கார் சென்றது. இரண்டு வாகனங்களும் எதிரே எதிரே விபத்து நடந்தது என்றால் ஆமாம். அந்த கார் டிரைவர்தான் மது அருந்தி இருந்ததா இந்த விபத்திற்கு காரணம் என்றால் அவர் மது அருந்தி இருந்தாரா என்று எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் அவர்தான் என்றாலும் அவர்மீதுதான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தால் நான் தவறாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.